**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.42/2019**

**2026** ம் வருடம் மார்ச் திங்கள் 05 ம் நாள் வாதி தரப்பில் 1 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திருமதி.மகேஸ்வரி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : வீரமுருகன் (PW3) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>**வாதி தரப்பில் முதன்மை விசாரணை**:</u>

1. நான் இவ்வழக்கின் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. கடந்த 02.07.2004 ம் தேதி தாவாச் சொத்துக்கும் தெற்கில் உள்ள சொத்தின் பகுதியை வேலுச்சாமி, ராஜாத்திக்கு எழுதி வைத்த அடமானப்பத்திரம் அசல் வா.சா.ஆ.39 ஆகும்.

3. கடந்த 02.07.2004 தேதியில் தாவாச்சொத்துக்கும் தெற்கில் உள்ள சொத்தின் பகுதியை வேலுச்சாமி, அஞ்சல் தேவிக்கு எழுதி வைத்த அடமானப்பத்திரம் அசல் வா.சா.ஆ.40 ஆகும்.

4. கடந்த 26.08.2011 ம் தேதியில் தாவாச்சொத்துக்கும் தெற்கில் உள்ள சொத்தின் பகுதியை வேலுச்சாமி, ராஜாத்திக்குக் கிரையம் கொடுத்த பத்திரம் அசல் வா.சா.ஆ.41 ஆகும்.

5. கடந்த 26.08.2011 தேதியில் தாவா சொத்துக்கும் தெற்கில் உள்ள சொத்தின் பகுதியை வேலுச்சாமி, அஞ்சலிதேவிக்குக் கிரையம் கொடுத்த பத்திரம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.42 ஆகும்.

6. 05.09.2001 தேதியில் மாரிமுத்துக்கு, 3 ம் பிரதிவாதி எழுதி வைத்த பவர் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.43 ஆகும்.

7. 06.09.1999 ம் தேதி தாவா சொத்தின் சேர்க்கையான சொத்தின் பகுதியை

அண்ணாச்சாமிபாண்டியன், தனலெட்சுமிக்கு எழுதி வைத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.44 ஆகும்

8. 06.09.1999 ம் தேதி தாவா சொத்தின் சேர்க்கையான சொத்தின் பகுதியை அண்ணாச்சாமிபாண்டியன், இராமகிருஷ்ணன், வடிவேல் ஆகியோர்களுக்கு எழுதி வைத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.45 ஆகும்.

9. அசல் வழக்கு எண் 89/2004 வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல்செய்யப்பட்ட எழுத்து மூலமான வாதுரை அலுவலக நகல் வா.சா.ஆ.46 ஆகும்.

10. அசல் வழக்கு எண்.89/2004 வழக்கின் வா.சா.2, வா.சா.3, வா.சா.4, வா.சா.5, வா.சா.6 மற்றும் பி.வா.சா.1 ஆகியோர்களின் சாட்சிய வாக்குமூலங்கள் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.47 ஆகும்.

11. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையின் உத்தரவுப்படி தாவா சொத்தில் இருந்த சீமைக்க கருவேல மரங்களை அகற்றுவதற்கு வாதிகளுக்கு அரசால் வழங்கப்பட்ட நோட்டீஸ் அசல் வா.சா.ஆ.48 ஆகும்.

**(வாதி தரப்பில் 3ம் தரப்பினர் திரு.வீரமுருகன் அவர்கள் ஆஜராகி வாதி தரப்பு ஆவணங்களாக 1 முதல் 10 ஆவணங்களை தாக்கல் செய்தார், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் இந்த சாட்சியை பொறுத்து தொடர்பில்லாதது எனவும், மேற்படி ஆவணங்களை 3ம் தரப்பினரான இந்த சாட்சியால் தாக்கல் செய்ய இயலாது எனவும், தாவா சொத்துக்கும் மேற்படி ஆவணங்களுக்கும் சம்மந்தம் இல்லை எனவும், எனவே அநத் ஆவணங்களை இந்த வழக்கில் குறீயீடு செய்ய கடுமையாக ஆட்சேபனை செய்யப்பட்டது)**

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:50:29 +0530